RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22356

OPEN ACCESS

# சி.சு. செல்லப்பா சிறுகதைகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் ஓர் ஆய்வு

கெ. பெனடி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, தைக்காடு, திருவனந்தபுரம், கேரளா-695014, இந்தியா

# C.S. Chellappa Short Stories in Problems in Children - A Study

K. Benady [a, *]

[a] Department of Tamil, Government Arts college, Thycaud, Thiruvananthapuram, Kerala-695014, India

* Corresponding Author: benadyktamil@gmail.com

Received: 26-04-2022
Revised: 05-07-2022
Accepted: 12-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

The encyclopedia of society describes the group of people living collectively in a small area following a common way of life. It is the parents who embrace the family. They perform all the functions of the house. Their main duty is to make the family life perfect. Husband and wife should love their children together. They should also be role models. Since children grow up watching family events, the effects of childhood are passed on to adults as well. In this way, through Chellappa's short stories, this essay examines the problems of poverty, caste atrocities and ridicule in the society.

**Keywords:** Society, Poverty, Caste, Short Stories

## முன்னுரை

மனித இனத்தின் கூட்டுறவு வாழ்க்கையையே “சமுதாயம் ”என்ற கூட்டமைப்பில் மக்கள் ஒவ்வொருவரும் அங்கத்தினர்களாக விளங்குகிறார்கள் .ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியை பின் பற்றி கூட்டாக வாழும் மக்களின் தொகுதியை சமுதாயம் வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் தருகிறது சமுதாய அமைப்பால் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கை பயணத்தில் பல்வேறு ஆவணங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகிறான்

இவ்வகையில் சி .சு. செல்லப்பா அவர்களின் சிறுகதைகளில் “குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்கள்” என்ற தலைப்பின் வாயிலாக சமுதாயத்தில் காணப்படும் அவலங்களான வறுமை, சாதி கொடுமை மற்றும் கேலி பேச்சால் ஏற்படும் சிக்கல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

குழந்தைகளுக்கு நல்லறிவு ஊட்டி அவர்களை சிறந்தவர்களாக வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். தன் குழந்தையை சான்றோன் என்று பிறர் கூற கேட்டவுடன் அவனை ஈன்ற பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட பெரிதும் மகிழ்ச்சி கொள்வாள் தாய் என்பதனை திருவள்ளுவர்.

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டத் தாய்” [1]

என்று குறிப்பிடுகின்றார்.

வாழ்வின் சுழற்சிக்குக் கணவன், மனைவி ,குழந்தை என்ற தொடர் அமைப்பே அடிப்படைக் காரணமாக அமைகிறது.

பெற்றோர்களே குடும்பத்தை அரவணைக்கின்றனர். வீட்டின் அனைத்து பணிகளையும் மேற்கொண்டு செய்கின்றனர் இல்லறத்தை செம்மையுர அமைத்துக் கொண்டு போதல் அவர்களின் தலையாய கடமையாகும். கணவனும் மனைவியும் சேர்ந்து குழந்தைகளிடம் அன்பு காட்டல் வேண்டும். அவர்களே முன்மாதிரியாகவும் திகழ வேண்டும். சிறார்கள் குடும்ப நிகழ்வுகளைப் பார்த்து வளர்கின்றமையால் சிறுவயதின் பாதிப்புகள் பெரியவர்களுக்கும் அப்படியே அவர்களிடம் இடம் பெறுகின்றது. பெற்றோர்களுக்கு ஒழுக்கம் இல்லையெனில் குழந்தைகள் பல துன்பங்களுக்கு ஆளாவார்கள். அவர்களுக்கு மூன்று வயது நிறைவுறும்போதே அறிவு வளரத் தொடங்கிவிடுகிறது. அன்றிலிருந்தே அவர்கள் மனமானது உலகத்தை ஆராயத் தொடங்குகிறது என்பது உளவியலாளர் கருத்தாகும்.

தாய், தந்தையரின் அன்புக்கு நிகர் உலகில் எதுவுமில்லை தன்னலமற்ற பாசத்தினால் உலகம் தழைக்கிறது. கணவன் மற்றும் சேய் நல்வாழ்வுக்காக தன்னையே தியாகம் செய்து வாழும் அன்னையின் அரவணைப்பில் உயிர்கள் வாழ்கின்றன.

பெற்றோர்களின் அன்பு உள்ளம் தான் குழவிகளை சீரிய முறையில் வளர்க்க உதவிசெய்கிறது. இவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு ஒற்றுமையுடன் வாழ அன்பை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இன்பம் தருதல் வேண்டும். தாயின் அன்புமொழியும் தந்தையின் அறவழியும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு நல்ல அடிப்படை ஆதாரங்களாகும்.

குழந்தைகள் நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் விளங்குவது தாயின் வளர்ப்பினிலே உள்ளது என்பதை

“எந்த குழந்தையும் நல்லகுழந்தைதான்

மண்ணில் பிறக்கையிலே

அவர் நல்லவர் ஆவதும் தீயவராவதும்

அன்னை வளர்ப்பினிலே”

என்ற திரைப்பட பாடல் உணர்த்துகிறது.

குழந்தை வளர்ப்பில் பெற்றோர்கள் இருவருக்கும் சமபங்கு உண்டு. குழந்தைகள் தங்கள் பெற்றோரை அப்படியே பின்பற்றும் தன்மையுடையவர்கள். பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்களோ அப்படியே குழந்தைகளும் வழி நடக்கும்.

குழவிகள் மென்மையான உணர்வு கொண்டவர்கள். அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் குடும்ப உறுப்பினர்களிடையே சுமூகமான உறவு இருப்பது அவசியம்.

சிறார்கள் குடும்பத்தின் மிகப்பெரிய சொத்து இவர்களின் ஆரம்ப வளர்ச்சி முழுவதும் பெற்றோர்களைச் சார்ந்ததே இருக்கின்றது. குழந்தைகளுக்கு இயற்கையாகவே இருக்கும் திறமைகள் வீட்டுச் சூழ்நிலை சரியாக இல்லையென்றால் நசித்து போய்விடும்.

பெற்றோர்கள் நடத்தை குறைபாடு உள்ளவர்களாக விளங்கினால் குழவிகள் பல வகையில் துன்பப்படுவர். அவர்களின் பொறுப்பற்ற தன்மையால் குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் ஏராளம். அவற்றை தமது சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளனர் படைப்பாளர்கள்.

மனிதர்கள் பெரும்பாலும் தங்களது பொறுப்புகளை ,கடமைகளை உணர்ந்து நடப்பதில்லை, உதாசீனப்படுத்தும் மனப்பான்மை மனிதர்களிடையே மிகுந்திருப்பது தான் குழந்தைகளுடைய பொறுப்பற்ற தன்மைக்கு காரணம். பெரும்பாலானப் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக திகழ்வதில்லை. சிறார்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்து வளர்ப்பதில்லை.

அவ்வித ஒழுக்கத்தை போதித்தாலும் தாங்கள் போதிக்கும் ஒழுக்கத்தினை அவர்களே மீறுகின்ற நிலையே இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றது. சிறுவயதில் காணும் காட்சிகள் செயல்கள் போன்றவைகள் சிறார்களின் அடி மனதில் பசுமரத்தாணி போல ஆழப் பதிந்து விடுகின்றன. அவை உரிய காலங்களில் அதற்கான சூழல்கள் ஏற்படும் போது வெளிப்பட்டு விடுகின்றன.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பொது ஒழுக்கம் குன்றி காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது. "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்னும் கூற்று முற்றிலும் உண்மையே என்பதை மேலே கூறிய கருத்துக்கள் உறுதி செய்கின்றன. குழந்தைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்னும் இக்கட்டுரை சி.சு. செல்லப்பா அவர்களுடைய சிறுகதை வாயிலாக முன்வைக்கப்பட்டுள்ள சிக்கலை ஆராய்கின்றது.

## வறுமை சிக்கல்கள்

'கொடியது கொடியது வறுமை கொடியது 'என்ற அவ்வை வறுமை கொடியது இளமையில் வறுமை கொடுதினும் கொடிது என்று அழுத்திக் கூறுகிறார். வறுமை பற்றியப் பல செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்கள் நன்கு பதிவாகியுள்ளன.

"கல்குயின்றது போல் நீங்காதது எனவும்"[2]

"வறுமை நிரயம் போன்று கொடியது"[3]

"பாம்பு போல் துன்பம் தருவது எனவும்"[4]

என்ற வரிகள் வறுமையின் துன்பத்தை உணர்த்திக் காட்டுகின்றன.

இவ்வறுமைத் துன்பத்தினை திருக்குறளில் வள்ளுவர்.

"இன்மை என ஒரு பாவி"[5]

"நல்குரவு எனும் இடும்பை"[6]

எனக்கூறி விளக்குகிறார்.

நாலடியார் வறுமையின் அவலத்தை

நீர்மையே யன்றி நிரம்ப எழுத்ததம்
கூர்மையும் எல்லாம் ஒழுங்கிழப்பார்- கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய்! நிரப்பென்னும்
அல்லர் அடையப்பட டார்"[7]

என்ற பாடல் வாயிலாக விளக்குகிறது.

"வையமீதில் வறுமை ஓர் கொடுமை அன்றோ"

சமுதாய அவங்களுக்கு வறுமையே அடிப்படைக் காரணம். இத்தகைய வறுமை குழந்தைகளின் வாழ்வில் பெருமளவு சிக்கலை ஏற்படுத்துகிறது.

நவீன உலகில் தினம்,தினம் வறுமையால் எண்ணற்றோர் மடிகின்றனர். என்றாலும் வறுமையால் அதிக துன்பத்துக்குக் குழந்தைகளே ஆளாகின்றனர்.

சி. சு. செல்லப்பா சிறுகதையில் வறுமையால் குழந்தைகளுக்கு ஏற்படும் சிக்கல்களை எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரின் கதைகளும் ஒவ்வொரு விதமாக சிறப்பிடம் பெறுகின்றன. வறுமை அனைவரது கண்ணோட்டத்திலும் ஒரே கருத்தை பெற்றிருப்பினும் அதை கூறும் விதத்தில் அவர்களின் தனித்தன்மைகள் புலப்படுவதை காணமுடிகிறது.

வறுமையால் உண்ண உணவின்றி, வசிக்க நல்ல வீடின்றி வாடும் நிலையை வறுமை என்கிறோம். இதனால் மக்கள் உளவியல் ரீதியாக பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவ்வகையான சிக்கல்கள் ஒவ்வொருவரின் மனநிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது மேலும் வறுமையினால் ஏற்படும் சிக்கல்களை சி.சு செல்லப்பா தன்னுடைய கதைகளில் வித்தியாசமாக சித்தரித்துள்ளார்.

சி சு செல்லப்பாவின் 'மார்கழி மலர்' என்னும் கதை சரஸ்வதி என்ற 'சச்சி' வறுமையால் வாடுவதையும் அதனால் அவள் எதிர்கொள்ளும் சிக்கலையும் மையப்படுத்துகிறது .

தந்தையற்ற குடும்பத்தில் ஏழ்மையும் வறுமையும் தாண்டவமாடுகின்றது. மார்கழி மாதம் தன் வீட்டு வாசலிலும் பூ வைக்க சச்சி விரும்புகிறாள். தாயிடம் தன் மன விருப்பத்தைச் சொல்கிறாள். குழந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற இயலாத நிலை.

"கிராமத்தில் சில பெரிய வீடுகளுக்கு ஆற்று ஜலம் கொண்டு வந்து கொடுத்து இதர சில்லறை ஏவல் வேலைகள் செய்து கொடுத்துத் தன் வயிற்றுப்பிழைப்பை நடத்தும் வாழ்க்கையை நினைத்து அங்கலாய்த்துக்கொண்டாள்"[8] என்ற நிலையிலும், "குழந்தையின் இந்த சிறிய ஆசையை கூட பூர்த்தி செய்ய முடியாதா? என்று ஒரு வினாடி யோசித்தாள்.சரி ,சரஸ்வதி வாசல்லேபோய்ப்பாரு. யாராவது பூசணிப்பூ வித்துண்டு போனால் கூப்பிடு. வாங்கி நம்ம ஆத்திலும் வைக்கலாம் " [9] என்று அனுப்புகிறாள்.

காலணாக்கூட கையில்

இல்லாத அவளுக்கு சில பூசணிப்பூக்களைக் கடனாகக் கொடுக்க மறுக்கிறான்

பூக்காரன் பக்கத்து வீட்டு தங்கம்மாள்.

"ஐயோ! மரகதம், என்ன

செய்கிறது! சில்லறையே இல்லையே, ஒரு ரூபாயாகத்தான் இருக்குமா"[10] என்று அனுதாபம் கூறிவிட்டு தன் வேலைக்குச்செல்கிறாள்.

இந்த ஏழ்மையின் பின்னணியும் வறுமையின் கொடுமையும் சச்சியின் ஆசைகளை தணிப்பதில்லை. அவள் குழந்தை எனவே தாய் மரகதம்மாள்,

"போனால் போகிறது சரஸ்வதி! நாளைக்கு வாங்கி வைப்போம். அதோ அவர்கள் வீட்டில் எல்லாம் வைக்கிறா பாரு. அதைப்பார்த்துக் கொண்டிறேன் " [11] என ஆறுதல் கூறுகிறாள்.

ஆனால் மார்கழிமலர்களை வேடிக்கை பார்க்கச் சென்ற சச்சிக்கு அவளது ஏழ்மையும் வறுமையும் பிற சிறுமிகளிடமிருந்து 'திருடி' என்ற அவப்பெயரையே பெற்றுத்தருகிறது.

"பக்கத்து வீட்டு வாசல் நின்று கொண்டிருந்த சிறுமிகள் சச்சியின் வருகையைக் கவனித்து விட்டனர்." அடி அடி ! சச்சு வராள். அவள் வீட்டு வாசல்லே பூ வைக்கலேடி!" என்று ஒரு சிறுமி தன் சகாக்களிடம் கூறினாள். இந்தச் சொற்கள் சச்சின் காதை தைத்தன.

"அவ இங்கிருந்து ஏதாவது பூவைத் தாண்டி திருட வந்திருப்பாள் திருட்டுப் பிணம்டி அது!" மற்றொரு சிறுமி வாய்த்துடுக்காக.

"ஆமாடி, ஜாக்கிரதையாத்தான் இருக்கணும்" என்று மற்றொரு சிறுமி உஷார் படுத்தினாள்.[12]குழந்தைக்கே உரிய மனவுந்தலின் தாக்கத்தால் அவள் ஒரு பூவை எடுத்துக்கொண்டு தன் வீடு நோக்கி ஓடுகிறாள். கண்காணித்த மற்ற சிறுமிகள் அவளை துரத்திவருகின்றனர்.

"திருடி! திருடி! என்று ஒரு பெண் கத்தினாள். சச்சியின் காதருகில் மற்றொரு பாவாடையின் படபடப்பு சப்தம் லேசாகக் கேட்டது, அவள் பின்னலை ஒரு பெண் பலமாகப் பிடித்திருந்தாள். முதுகில் அதே சமயம் பளீரென

ஓர் அறை அந்த வேகத்தில் கல் தடுக்கி கீழே விழுந்து விடுகிறாள்".[13] இங்கு இக்கதையில் சச்சியின் வறுமை சூழலை அவளுக்கு திருடி என்ற அவப்பெயர் பிற சிறுமிகள் வைத்துக் கூப்பிடும்

நிலைக்குத் தள்ளப்படுகிறாள். மேலும் சக மாணவிகளின் முன்னிலையில் வறுமையின் காரணமாகத் தனிமைப்படுத்தப்படுகிறாள். இதனால் அவள் மனம் பல இன்னல்களை சந்திக்கின்றன என்பதை அறிய முடிகின்றது.

## சாதி

இந்தியா பழம்பெரும் நாடு இயற்கை வளங்கள் மலிந்த நன்னாடு. வேதங்களும் இதிகாசங்களும் தோன்றிய நாடு. ஆனால் இந்த நாட்டிலுள்ள மிகப்பெரிய குறை ஜாதி வேறுபாடாகும்.

சாதி ஒரு மனிதனின் வாழ்வை ஆளுவது மட்டுமின்றி அவன் வாழும் சமுதாயத்தில் அவனது இடத்தையும் அதுதான் நிர்ணயிக்கிறது.

"ஆரியரின் வருகைக்குப் பின்பு தான் தமிழகத்தில் சாதி வேற்றுமைகள் தலை தூக்கின. ஆரியரின் வருகைக்கு முன்பு தமிழகத்தில் சாதிமுறை இல்லை என்று சீனிவாச ஐயங்கார் கூறுகிறார்.[14]

"ஆறு. இராமநாதனும் தமிழகம் உள்ளிட்ட பழைய இந்தியாவில் தொழிற்பிரிவுகள் காணப்பட்டன. இந்த தொழிற்பிரிவுகளே ஆரியர் வருகைக்கு பின் சாதிப்பிரிவுகளாக மாற்றம் பெற்றுள்ளன.[15]

இலக்குமிதரன் பாரதி என்பவர் சாதியின் தன்மையைப் பற்றி குறிப்பிடும் போது "இந்திய மக்களின் இரத்தத்தோடு ஊறிப்போன இயல்பென்று இனம் ,மதம், சமூகம், பொருளாதாரம், அரசியல் அனைத்திலும் சாதி ஊடுருவிப் பாய்ந்து ஆட்சி செய்து வருவதாக சமூகவியலார் கருதுகின்றனர்".16 என்கிறார்.

சி .சு செல்லப்பாவின் 'அவள் மேல் ஜாதியாம்' சிறுகதை மட்டுமே சாதிக் கொடுமை பற்றி பேசுகிறது. இவர் உயர் சாதி பெண்ணினால் தாழ்ந்த சாதி சிறுமிகள் படும் துன்பத்தை அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

இச்சிறுகதையானது மேல்சாதியைச் சார்ந்த கிழவிக்கும், அரிசன சிறுமிகளுக்கும் இடையில் நடக்கும் பிரச்சினையை மையமாக வைத்துப் பின்னப்பட்டுள்ளது. உயர் சாதி பெண்ணை எதிர்த்து பேசும் அரிசன சிறுமிகளை.

"அட! சிறுக்கிகளா! என்னை கீழிறங்கச் சொல்வதற்கு உங்களுக்கு அவ்வளவு தெம்பா ?என்ன கொழுப்பு! ஹீம்.... என்று உக்ரரூபம் கொண்டு ஆங்காரத்துடனே, அவர்கள் ஒவ்வொருவர் தலைமீதிருந்த பானைகளையும் பிடுங்கிக் கீழே போட்டு உடைத்து உருப்படி இல்லாமல் செய்து விட்டாள்".[17]

பொதுவாகவே சின்னஞ் சிறார்கள் சாதி என்பதே என்னவென்று தெரியாத நிலையில் தான் இருப்பார்கள். அவர்களுக்கு சாதியைப் பற்றிய சிந்தனையை ஊட்டுவதில் முக்கியப்பங்கு வகிப்பவர்கள் பெற்றோரும் சுற்றத்தவறும் ஆவர்.

சிறுமிகள் தாழ்ந்த சாதி என்பதால் தனக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று நினைக்கிறாள் அம்மூதாட்டி.

"இந்தப் பள்ளர் சிறுமிகளுக்கு

இவ்வளவு இருந்தால் மேல்சாதி காரிக்கு எவ்வளவு இருக்காது....

நான் கொடுக்க மாட்டேன் என்றாள்"[18]

உயர்ந்த சாதிக்காரர்களை எதிர்த்துப் பேசக்கூடாது அப்படிப் பேசினாலும், அவர்கள் தரும் தண்டனையைப் பொறுமையாகவும் கண்ணீரோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும்

எண்ணத்திற்கு சிறுமிகள் உளவியல் ரீதியாக ஆட்பட்டிருப்பதை இக்கதை வாயிலாக உணர முடிகிறது காலங் காலமாக ஏழைகளின் மீது உயர்சாதி காரர்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் கதையின் வழி காண முடிகிறது.

கிழவி உயர்ந்த சாதி என்ற மமதையில் வளர்ந்தவள். தங்களுக்குக் கீழ்சாதி குழந்தைகள் அடிமைதான் என்ற எண்ணமுடையவள். கீழ்சாதியினர் என்ற காரணத்தினால் அவர்களின் உரிமையும் சுதந்திரமும் மேல் சாதியினரால் பறிக்கப்படுகின்றன என்ற உண்மையை இக்கதை தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டுகின்றது.

## கேலிப்பேச்சு

பெரியவர் மற்றும் உறவினர்களின் கேலி, கிண்டல்களால் குழந்தைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகின்றனர். அது அவர்களிடம் கோபம், அறியாமை, எரிச்சல் போன்ற பல உணர்ச்சிகளாக வெளிப்படுகின்றன. குழந்தைகள் மனவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளகினர். சி.சு. செல்லப்பாவின் “ சாயல் “ கதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மனித உடல், பழக்கவழக்க ஜாடைகளெல்லாம் பாரம்பரியமாகத் தலைமுறை, தலைமுறையாக நடந்து வரும் ஒன்று .அதை ஒரு குறையாகக் கண்டு பேசுவதும் கேலிசெய்வதும் உறவினர் வழக்கம் என்ற மையத்தை சுற்றி உழல்கிறது சாயல் கதை.

மொண்ணையான மூக்கும் சப்பை வாயுமாகப் பிறந்த சௌமியா என்ற சிறுமியை அத்தை மற்றும் உறவினர்கள் கேலி செய்கின்றனர். பாராட்டுகிறாள் அவள் காரணமாக எடுத்துக் கொள்கிறாள்.

சௌமியாவின் அத்தை “சச்ரூபம் இந்த சௌமியாவே தான் அது …இந்த மொண்ணை மூக்கு அப்படியே சொல்லிக்கொண்டே சௌமியா மூக்கைப் பிடித்தாள். சௌமியா அத்தைக் கையை பிடுங்குவதற்குள் அத்தைக் கையை எடுத்து அவள் உப்பக் கன்னத்தைக் கிள்ளினாள். இதே உப்பைக் கன்னம் சப்பைவாய் அத்தையின் கையை பிடிப்பதற்குள் அத்தையை கையை எடுத்துவிட்டு மறுபடியும் மூக்கைப் பிடித்தாள்"[19] என்றும் அவளை வம்புக்கிழுக்கிறாள் அத்தை.

அத்தை மட்டுமல்ல அப்பா குழந்தையை நன்றாகப் பார்த்துவிட்டு, சௌமியா மூக்கைப் பிடித்துக் கொண்டே இந்த மூக்குதான், இந்த உப்பக்கன்னம் தான்!” என்று கன்னத்தையும் திருகினார்.

“போங்க அப்பா என்று சௌமியா அப்பா கையைத் தள்ளினாள். அதே சமயம் ரமணியும் சிரித்துக் கொண்டே அவள் மூக்கை பிடித்து உன் மூக்கு மாதிரி அம்பி பாப்பாக்கு”[20]

இதனால் தன் தம்பியாகிய அம்பி பாப்பாவை கூடக் காண மறுப்பதுடன் வெறுக்கவும் செய்கிறான் சிறுமி சௌமியா.

ஆனால் பிறந்த குழந்தையைக் காண வருகின்ற தன் பாட்டியிடம் தன் ஆதங்கம் அனைத்தையும் கொட்டித்தீர்க்கிறாள். சிறுமி சௌமியா.

பெரியவர்களைக் கேலியாகப் பேசினால் வாயில் புண் வரும் என்ற பாட்டில் கூறிய கருத்தை நினைவு கூர்ந்து, என்னை மட்டும் சும்மாச் சும்மா கேலி பண்ணினா அத்தைக்கும் அப்பாவுக்கும் புண் வராதோ? சௌமியா மடக்கிப் பேசினாள். ஏன் பாட்டி, சின்னவாளையும் தானே கேலி பண்ணக்கூடாது?”[21]

மேலும். “சீ சின்னவளாக இருக்கிறப்போ உன்னையும் இப்படித்தானே கேலி பண்ணினா, இல்லையா பாட்டி”[22], என்று கேட்கிறது குழந்தை .

இவ்வாறு கேலிப் பேச்சுகளால் குழந்தைகளின் மனம் வேதனை அடைந்து பெற்றவர்களையும் உற்றவர்களையும் வெறுக்கக் கூடிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர் என்ற கருத்தினை முன்வைக்கிறது 'சாயல்' என்ற கதை.

## முடிவுரை

சிறுகதையில். இருந்து மூன்று வகையான சிக்கல்களைக் குழந்தைகள் பெரும்பாலும் எதிர்கொள்வதாக இனம் காண முடிகின்றது. சிக்கல்கள் தோன்றுவதற்கான காரணங்கள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

## References

Sellapa Padaippugal (2021) Ezhuthu Pirasuram, Chennai, India

Ramanathan, A. (2020) Tamil Life - Folk Songs will Show (Tamil), Manivasagar Publishing House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License